Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 53 Of 2024**

Deposition of ....... witness for .................. Prosecution........ **P.W.6**

Defence Court

| | |
|---|---|
| Name | திருமதி. எழிலரசி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

**1 மற்றும் 4 எதிரிகள் இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய்விட்டது. 3,10,11 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**(சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**முதல்விசாரணை**:

நான் தமிழக காவல் துறையில் ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2021 ஆம் பணி ஒய்வு பெற்று விட்டேன். கடந்த 2013 ஆம் ஆண்டு நான் திருப்பாதிரிபூலியுர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி போது அந்த சமயத்தில் 10.02.2013 ஆம் தேதி நான் திருப்பாதிரிபுலியுர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது இரவு 23.00 மணிக்கு காரைக்காடு கிராமத்தை சார்ந்த தாமரைக்கண்ணன் த.பெ. பழமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 83/2013, பிரிவு 147,148,294(பி) 341, 120(பி), 506(2) , 307 இதசப்படி கூடுதல் பிரிவு 3 PPD Act கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை உயர்அதிகாரிகளுக்கு விசாரணைக்காக வைத்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 2 ஆகும்.** இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதசாஆ 1 புகார் மேற்படி வாதி என்னிடம் எழுதிக்கொண்டு வந்திருந்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:

வாதி ஒரு அரசியல் கட்சியும், அதசாஆ 2 முதல் தகவல் அறிக்கையில் முதலாவது எதிரியாக சொல்லப்பட்டுள்ள வேல்முருகன் என்பவர் மற்றொரு அரசியல் கட்சியும் சார்ந்தவர்கள் என்றால் வாதி ஒரு அரசியல் கட்சியை சார்ந்தவர் என்று எனக்கு தெரியும். வேல்முருகன் பற்றி எனக்கு தெரியாது. ( அதசாஆ 2 முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள முதலாவது எதிரி திருநாவுக்கரசு மகன்

வேல்முருகன் இறுதி அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்ட நபர் கிடையாது). இரண்டு கட்சிகளுக்கு இருந்த பகையின் காரணமாக தற்போது உள்ள எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதசாஆ 1 புகாரில் எங்களுக்கு தேவைப்பட்ட சங்கதிகளை சேர்த்துக்கொண்டு அதன் அடிப்படையில் ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*